**செ. கு. எண்:100** **நாள் :20.07.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா**

அவர்களின் அறிக்கை – **20.7.2016**

திருப்பூர் மாவட்டம், **அமராவதி அணையிலிருந்து** தண்ணீர் திறந்துவிடக் கோரி அமராவதி பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் சங்கத்தினர் உள்ளிட்ட திருப்பூர் மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், **அமராவதி அணையிலிருந்து,** திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு **21.7.2016 முதல்** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள **32,770 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**